1981 ஆகஸ்ட் 25]

ஆ. பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, "1981-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

இ. வக்ஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, "1981 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

ஈ. நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

*திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது நான் சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், அமைச்சரே முதலிலே விளக்கங்களைச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார். காரணம், இதிலே ஒரு சின்ன வார்த்தையினால், ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் தேவை என்று கோரப்படுகிறது. தமிழ்நாடு அர்பன் லாண்ட் சீலிங் ஆக்டிலே ஏற்கனவே, இன்னின்னவர்கள் இவ்வளவு இவ்வளவு நிலம்

*1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.